1981 மே 13]

கூவத்தூர் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 1093—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி கூவத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) கட்டடம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மதுராந்தகம் தொகுதி கூவத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டும் வேலை ரூபாய் 3.80 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து ஏஜென்சியும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது.

(ஆ) இவ்வருடம் செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடைந்து விடும் என திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவத்தூர் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிக் கட்டட வேலை 1977 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டது என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கால தாமதத்திற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, 1977 அல்ல, 1975 இல் இந்தக் கட்டடம் தொடங்கப்பட்டு அடித்தளம் வரையில் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் நிதி நிலைமை காரணமாக 75 இல் நிறுத்தப்பட்டது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 1980 இல் ஆணை அங்கீகரிக்கப்பட்டு அதற்காக ரூ. 3.80 லட்சத்தில் ஒதுக்கி அதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது.

கீழ்பாகம் கிராமம் வடிவேல்நகர் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல்.

*வினா எண். 1094—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி ஆண்டாங்கோவில் கீழ்பாகம் கிராமம் வடிவேல் நகர் ஆதிதிராவிடர்கட்கு வீட்டுமனைப்பட்டாவிற்கு நிலத்தைக் கையகப்படுத்தும் முறை நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?

மாண்புமிகு திரு.எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் வட்டம், ஆண்டாங்கோவில் கீழ்பாகம் கிராமம் வடிவேல் நகரில் 28 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும் திருக்கம்புலியூர் கிராமத்தில் 107 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும் வீட்டுமனை வழங்க ஆண்டாங்கோவில் கீழ்பாகம் கிராமம் நில அளவை எண் 603-ல் 7.78 ஏக்கர் புன்செய் நிலம் கையகப்படுத்த மாவட்ட ஆட்சியரின் 4(1) அறிவிக்கை முன்மொழிவிற்கு சமூகநலத்துறையின் 1—2—78 நாளிட்ட வா'லாய அரசாணை எண் 257-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் 6 விளம்பல் முன்மொழிவை அரசுக்கு அனுப்பி வைத்தார். நிலச்சொந்தக்காரர் கையகப்படுத்தலை எதிர்த்து அரசுக்கு மனு அளித்தார். இவை அரசின் ஆய்வில் இருக்கையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் சட்டம் நடைமுறைக்கு வந்தது. புதிய சட்டத்தின்கீழ் நிலம் கையகப்படுத்தல் நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சியர் கோரப்பட்டார். மாவட்ட ஆட்சியர், நிலச்சொந்தக்காரர் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலத்தை வீட்டு மனைகளாக்கி வீடற்றவர்களுக்கு விற்றுவிட்டாரெனவும் மனைகளை வாங்கியவர்கள் வீடற்றவர்களாக உள்ளதால், வேறு நிலம் கையகப்படுத்த வேண்டி உள்ளதெனவும் தெரிவித்தார். அவரது கருத்தினை ஏற்று வேறு நிலம் கையகப்படுத்தும்படி மாவட்ட ஆட்சியர் கோரப்பட்டார். இதன்மீது மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார். எனவே கையகப்படுத்தல் நடவடிக்கை நிறுத்தப்படவில்லை.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாற்று நிலம் பார்க்கிற திட்டம் கூட ஒரு ஆண்டுக்காலமாக அப்படியே நிலுவையிலே இருக்கிறது. ஆகவே குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, 3, 4 மாதம் என்று வரையறுத்து அதற்குள்ளாக அந்த நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்று அரசு தக்க உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டிருந்த நிலத்தின் நீக்கல் அறிவிப்பு 1-4-81 அன்று அரசு பதிவிதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அதற்கான தாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கரூரில் உள்ள ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியரிடமிருந்து முன் மொழிவைப் பெற்றவுடன் அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உடனடியாக அந்த நிலத்தினைக் கையகப்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தும்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை அமைக்க நிலத்தைக் கையகப்படுத்தும்பொழுது அதிக விலையுள்ள நிலங்களைக் குறைந்த விலைக்கு அரசு கேட்பதால் நிலச் சொந்தக்காரர்கள் தர மறுத்து சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இவற்றைப் போக்குவதற்கு மாற்று வழிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மே 13]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று அதிலே இருக்கின்ற நியாய உணர்வுகளை உணர்ந்து குறையை நீக்குவதற்காக என்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

டெம்ப்ளாஸ்ட் தொழிற்சாலைக்கு அளிக்கப்பட்ட வரி விலக்கு.

* குறுகியகால வினா எண். 20—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டெம்ப்ளாஸ்ட் என்ற தொழிற்சாலைக்கு அரசு வரி விலக்கு ஏதேனும் அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

(இ) அந்த நிறுவனம் கட்ட வேண்டிய வரி பாக்கி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாள் வரி விலக்கு கொடுக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டிலிருந்து 74 ஆம் ஆண்டு வரையிலும் அரசுக்கு அதனாலே நஷ்டம் 82,84,83,972 ரூபாய் 82 பைசா. இப்பொழுது அவர்கள் வரி கொடுக்க வேண்டியது பாக்கி 94,04,412 ரூபாய்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிறுவனத்திற்கு எந்த ஆண்டு அனுமதி அளிக்கப்பட்டது? எவ்வளவு மூலதனத்தோடு இந்தத் தொழிற்சாலை துவக்கப் பட்டது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்கிறபொழுது சொன்னேன், 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் தேதி என்று சொல்லி விட்டேன். அதற்கு மூலதனம் அப்பொழுது அவர்கள் போட்டது 947 இலட்சம். அதாவது 9.47 கோடி.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, வரிவிலக்கு எத்தனை ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட்டது? இதைப் போல மற்ற எந்த நிறுவனங்களுக்காவது வரிவிலக்கு கொடுக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, வரிவிலக்கு கொடுக்கிறபொழுது புதிதாக ஆரம்பிக்கிற தொழிற்சாலை என்று அதற்காக வரிவிலக்கு இத்தனை ஆண்டு என்றுதான் கொடுப்பது வழக்கம் என்று நான் கருதுகிறேன்